//மின்னஞ்சலில் //

தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையரக இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள், சென்னை – 06

ந.க.எண்.13381 / அ4 / இ4 / 2022, நாள். 08.03.2022.

*****

பொருள்: தமிழ்நாடு அமைச்சுப்பணி – உதவியாளர், இளநிலை உதவியாளர், தட்டச்சர், மற்றும் சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை–III – 2022–2023ஆம் ஆண்டிற்கான காலிப்பணியிட மதிப்பீடு விவரம் கோருதல்– சார்பு.

*****

2022–2023ஆம் ஆண்டிற்குரிய தங்கள் நியமன அலகிற்கான உதவியாளர், இளநிலை உதவியாளர், தட்டச்சர், சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை–III ஆகிய பதவிகளுக்கான நேரடி நியமன காலிப்பணியிட மதிப்பீட்டினைத் தயார் செய்யும் பொருட்டு, 15.03.2022 முதல் 14.03.2025 வரை **பதவி உயர்வு மற்றும் ஓய்வு பெறுவதால் ஏற்படக் கூடிய காலிப் பணியிடங்கள் குறித்த விவரத்தினை இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் பணியிடம் வாரியாகத் தனித்தனியாகத் தயார் செய்து** மாவட்டக் கல்வி அலுவலர்கள் சார்ந்த முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு அனுப்ப வேண்டும். அவ்வாறு மாவட்டக் கல்வி அலுவலர்களிடமிருந்து பெறப்படும் விவரங்களுடன் முதன்மைக் கல்வி அலுவலர்கள் தங்களது நியமன அலகில் உள்ள பணியிடங்களுக்குரிய விவரங்களையும் சேர்த்து இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் வருவாய் மாவட்ட அளவில் தொகுப்புப் பட்டியலைத் தயாரித்து 15.03.2022–க்குள் Excel-லில் TAU–Marutham Font (மருதம்)–ல் தட்டச்சு செய்து, **இவ்வலுவலக "அ4" பிரிவு மின்னஞ்சல் மற்றும் இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) (jdpcc2018@gmail.com) மின்னஞ்சல் முகவரிக்கும், முதன்மைக் கல்வி அலுவலரின் கையொப்பமிட்ட நகல் ஒன்றினை இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) பெயரிட்ட முகவரிக்கும்** அனுப்பி வைக்க வேண்டுமென அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**இணைப்பு:** படிவம் – 1 மற்றும் 2

**இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி)**

பெறுநர்

அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

நகல்: அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள், மாவட்ட வயது வந்தோர் கல்வி அலுவலர்கள், ஆங்கிலோ இந்தியப் பள்ளிகள் ஆய்வர், முதன்மை உடற்கல்வி ஆய்வாளர்கள் மற்றும் மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர்கள்.

நகல்: திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, சென்னை – 6.
நகல்: இயக்குநர், தொடக்கக் கல்வி இயக்ககம், சென்னை – 6.
நகல் : உறுப்பினர் செயலர், ஆசிரியர் தேர்வு வாரியம், சென்னை – 6.
நகல்: இயக்குநர், மெட்ரிக்குலேஷன் பள்ளிகள் இயக்ககம், சென்னை – 6.
நகல்: இயக்குநர், பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்ககம், சென்னை – 6.
நகல்: இயக்குநர், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை – 6.

} நகல் பணிந்து அனுப்பப்படுகிறது. காலிப்பணியிட மதிப்பீடு குறித்து தங்கள் அலுவலகம் சார்ந்த விவரங்களை இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் அனுப்பி வைக்குமாறு பணிவுடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

நகல்: இவ்வலுவலக அ2 பிரிவு (இவ்வலுவலகம் சார்ந்த விவரங்களை அளிக்கும் பொருட்டு).

படிவம்–1

வருவாய் மாவட்டம்:

உதவியாளர், இளநிலை உதவியாளர், தட்டச்சர் மற்றும்
சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை–III பணியிடம்

(ஒவ்வொரு பணியிடத்திற்கும் தனித்தனியாக படிவம் இணைக்கப்பட வேண்டும்)

| வ. எண். | 14.03.2022ன்படியான காலிப்பணியிடம் (பள்ளி / அலுவலகம்) | காலியேற்பட்டதற்கான காரணம் | எந்த தேதி முதல் காலி ஏற்பட்டது |
|---|---|---|---|
| | | | |

சான்று

இம்மாவட்டத்தில் உள்ள இளநிலை உதவியாளர் / தட்டச்சர் / சுருக்கெழுத்துத் தட்டச்சர் நிலை III பணியிடங்கள் சார்ந்து அளிக்கப்பட்டுள்ள மேற்படி விவரங்கள் அனைத்தும் ஆவணங்களின்படி உறுதி செய்து அளிக்கப்பட்டுள்ளது என சான்றளிக்கப்படுகிறது.

முதன்மைக் கல்வி அலுவலர் கையொப்பம்

இணை இயக்குநர் (பணியாளர்தொகுதி).

16/03/2022

படிவம்-2

வருவாய் மாவட்டம்:

உதவியாளர், இளநிலை உதவியாளர், தட்டச்சர் மற்றும்
சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை-III பணியிடம்

(ஒவ்வொரு பணியிடத்திற்கும் தனித்தனியாகப் படிவம் இணைக்கப்பட வேண்டும்)

| 15.03.2022 முதல் 14.03.2025 வரையான 3 ஆண்டு காலத்தில் பணி ஓய்வு / விருப்பு ஓய்வு / இதர காரணமாக ஏற்படவுள்ள காலிப்பணியிடம் விவரம் | | | |
|---|---|---|---|
| வ. எண். | ஓய்வு பெறும் பணியாளரின் பெயர், பதவி மற்றும் பள்ளி/ அலுவலகம் (திரு. / திருமதி / செல்வி) | பிறந்த நாள் | ஓய்வு பெறும் நாள் |
| | | | |

சான்று

இம்மாவட்டத்தில் உள்ள இளநிலை உதவியாளர் / தட்டச்சர் / சுருக்கெழுத்துத் தட்டச்சர் நிலை III பணியிடங்கள் சார்ந்து அளிக்கப்பட்டுள்ள மேற்படி விவரங்கள் அனைத்தும் ஆவணங்களின்படி உறுதி செய்து அளிக்கப்பட்டுள்ளது எனச் சான்றளிக்கப்படுகிறது.

முதன்மைக் கல்வி அலுவலர் கையொப்பம்.

இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி).